வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 11/2019

வழக்கு சாட்சி LW5 /PW6

| பெயர் | கணேஷ் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | ரகுராம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 36 |

தேதி 13.02.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் திரு.வி.க. நகர் பகுதியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.06.,2017 அன்று பகல் 12 முதல் 12.30 மணி வரை ஆசிரியர் காலனி அருகே சுஜித்ரா என்பவருக்கும், தாரணி என்பவருக்கும் பணம் சம்மந்தமாக தகராறு ஏற்பட்டுள்ளது. அங்கு போலீசார் வந்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் செய்து கொடுத்தேன். ஆஜர் எதிரி சுஜித்ரா தன்னிடம் பணம், நகைகள் தற்போது இல்லை என்று தாரணியிடம் கூறினார். அதை நேரடியாக பார்த்தேன். அப்போது அருகில் போலீசார் இருந்தார்கள். போலீசார் இருவரையும் விசாரித்து புகார் எழுதி கொண்டார்கள். நான் மேற்படி சம்பவத்தை பார்த்தற்காக கையொபம் கேட்டார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் எந்த முகவரி என்றால் பெரம்பூர் திரு.வி.க. நகர். தாரணி எந்த முகவரி என்றால் ஆசிரியர் காலனி. தாரணிக்கும், சுஜித்ராவிற்கும் எப்படி பழக்கம் என்றால் நட்பு ரீதியான பழக்கம். எந்த முகவரியில் இருவரும் வசித்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாரணி எனக்கு எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் பிரச்சனைக்கு பின்புதான் தெரியும். இருவரும் பிரச்சனை என்று மட்டும்தான் தெரியும் என்றால் ஆமாம். தாரணியும், சுஜித்ராவும் எங்கு சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றால் சரியாக தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு எங்கு சென்றேன் என்றால் நான் ரெட்டேரியில் இருந்து அம்பத்தூருக்கு ஏசி ரிப்பேருக்காக சென்றேன். ரெட்டேரிக்கு நான் எந்த முகவரிக்கு சென்றேன் என்றால் சரியாக தெரியாது. ரெட்டேரியில் இருந்து அம்பத்தூருக்கு கடப்பா ரோடு வழியாக செல்லும்போது நான் இருவரது சண்டையையும் பார்த்தேன். நான் காவல் நிலையத்திற்கு எந்த வழக்கிற்கு சென்றேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் எனக்கு தெரியாது என்றாலும், வேறு வழக்கிற்கு காவல் நிலையத்திற்கு செல்லும்போது கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்ததில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**